Regd. No. M 3473

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)
ராஜா அண்ணுமலைபுரம், மதராஸ்-28

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 30	விசுவாவசு ஆனி-ஆடி 1965 ஜுலை	பகுதி 4

பொருளடக்கம்

1.	தலையங்கம்	....	61
2.	எது உண்மை ?	....	62
3.	பிரமை பிடித்த குழந்தைகள்	....	63
4.	பிரதேச ஆராய்ச்சியில் ஈடுபடும் இளைஞர்கள்	...	64
5.	வித்யா விநோதினி பரீட்சைக்கான அங்கீகாரம் வாபஸ்	...	67
6.	ஆசிரியர்கட்குக் கட்டுரைப் போட்டி அறிவிப்பு	....	68
7.	எஃகோ (ECHO)	...	69

Printed by T. V. Jagannathan, at The Hind Press Private Ltd.
113, R. K. Math Road, Madras-28.

Published by Sri L. Mariapragasam, B.A., L.T., J.P. for the
S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.
Editor: Sri A. K. Sitharaman, B.A., L.T.,

பாலர் கல்வி

தொகுதி 30	விசுவாவசுஹு ஆனி-ஆடிமீ 1965 ஜுலை	பகுதி 4

தலையங்கம்

இந்தக் குறிப்பு எழுதும்போது செய்தியைத்தாள் மூலம் ஆசிரியர் பஞ்சப்படி மத்திய அரசாங்க ஊழியர் படியளவுக்கு நம் அரசாங்கம் உயர்த்தியிருப்பது குறித்துப் பெரு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஆயினும் தற்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையிலே இந்தப்படியோ அல்லது ஊதியமோ எவ்வகையிலும் ஈடாகாது என்பது நம் தலைவர்களுக்குத் தெரிந்த விஷயமே. அதிலும், பெரும் உழைப்பு உழைத்துச் சிறு ஊதியம் பெறும் நம் துவக்கப்பள்ளி ஆசிரியர் கட்கு இது எவ்வகையிலும் போதியதல்ல. எனினும் இதனால் தற்காலிகமான ஓர் மன நிம்மதி ஏற்படும்.

காரைக்குடியில் நடந்த கல்வி மகாநாட்டில் பெரும்பாலோர் சம்பளப்படி, மற்றும் இதர சலுகைகளைப் பல கோணங்களில் ஆராய்ந்து எடுத்துரைத்தனர். ஆரம்பப்பள்ளி ஆசிரியர் முதற் கல்லூரி ஆசிரியர்கள் வரை இச்சிக்கலான பொருளைப்பற்றிப் பல தரம் பேசிப் பல முடிவுகள் எடுத்தார்கள். ''வானிலே ஓர் வெள்ளிக்கோடு''போல இப்போது அறிவித்திருக்கும் படிஉயர்வு சற்று நிம்மதியைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

சமீபத்தில் டாக்டர் கோத்தாரி அவர்கள் விடுத்திருக்கும் செய்தி ஆசிரியர்களுக்கு ஓர் பெருமிதம் நாட்டின் வருங்கால நல்வாழ்விற்கு எவ்விதம் அணைத்திட்டங்களும், இயந்திரத் தொழிலும் முக்கியம் அடைந்திருக்கின்றனவோ அவற்றைக் காட்டிலும் ஆசிரியத் தொழில் மிகவும் பொறுப்பு வாய்ந்தது. அவர் சொன்ன வார்த்தைகள் "ஆசிரியர்கள் ஊதிய உயர்வும், சலுகைகளும் கேட்கிறார்கள் என்றால், தங்களுக்குப் பிரத்தியேகமாக எதுவும் கேட்கவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் சில ஆதாரச் சலுகைகள்தாம். தேசமக்கள் பிழைப்பும், கல்வியும் ஒன்றான பிரச்சினைகளே'' என்பன.

இவைகளையெல்லாம் கேட்கும்போது உண்மையாகக் காரியங் கைகூடுமா? அல்லது எல்லோரும் பேசுவதுபோல் வெறும் சொற்களாகவே மாறிவிடுமா ? என்ற ஐயம் எழுகின்றது. இவ்விதச் சூழ்நிலையில் ஆசிரியர்கள் பொறுப்போடு வேலை செய்து, அதிகப்படியான சலுகைகளுக்குத் தகுதியானவர்கள் என்று காட்டவேண்டும். ஊழியத்தில் ஆர்வம், உழைப்பிலே உண்மை வாழ்விலே உற்சாகம் இவையே நமது கொள்கையாக இருத்தல் வேண்டும்.

எது உண்மை?

(சிறு கதை)

தமிழ் நாட்டில் அழகு வாய்ந்த நகரங்கள் பல இருக்கின்றன. அவைகளில் அழகாபுரி என்பது ஒன்ருகும். ஊருக்கு வெளியே பச்சைப் பசேலென்று தோப்புகள் அமைந்திருந்தன. ஊருக்கு உள்ளே வரிசை வரிசையாக இரயில்கள் செல்வதுபோல வீடுகள் அமைந்திருந்தன. ஊரினுடைய நடுவில் ஒரு அழகிய கோயில். அதனுடைய கோபுரம் எங்கிருந்து பார்த்தாலும் கண்ணுக்குத் தெரியும். தென்னை மரத்தில் தேங்காய்கள் தொங்குவதுபோல், கோபுரத்தின் உச்சியில் கலசங்கள் காணப்பட்டன. கோயிலில் காலையிலும் மாலையிலும் மணி அடிப்பார்கள். அப்பொழுது சிறு குழந்தைகள் பெரியவர்களுடன் கோயிலுக்குச் செல்வார்கள்.

அவ்வூரில் சீதாப்பாட்டி என்ற ஒரு கிழவியிருந்தாள். அவள் ஒவ்வொரு நாளும் மாலையில் கோவிலுக்குச் செல்லும்போது, தன்னுடைய இரண்டு பேரன்களையும் அழைத்துச் செல்வாள். மணிவண்ணன். கலிக்கண்ணன் என்பது அவர்களுடைய பெயர்களாகும். ஆண்டவனை வணங்கும் நேரத்தைத் தவிர, மற்றைய நேரங்களிலெல்லாம் சீதாப் பாட்டி தன் பேரன்களுடனேயே இருப்பாள். அவர்களுடன் நேரத்தைக் கழிப்பதில் அவளுக்குத் தனி மகிழ்ச்சி. மாலை நேரத்தில் ஐந்து மணிக்கு அவர்களைக் கோயிலுக்கு அழைத்துப் போய் ஏழு மணிக்குத் திரும்ப அழைத்து வருவாள். சீதாப் பாட்டி ஒவ்வொரு சாமியாக வணங்கி வருவதற்கும், மணிவண்ணனும், கலிக்கண்ணனும் ஊர்ப்பிள்ளைகளுடன் சேர்ந்துகொண்டு ஒவ்வொரு விளையாட்டாக விளையாடி முடிப்பதற்கும் நேரம் சரியாக இருக்கும். குதிரைத் தாண்டுதல், கூடுவிட்டுக் கூடு பாய்தல் போன்றவை அவர்களுக்கு இன்பமான விளையாட்டுக்களாகும்.

ஒரு நாள் வெள்ளிக்கிழமை யன்று கோயிலில் ஒரே கூட்டம். அக்கூட்டத்திற்குக் காரணம் புதிதாக வந்திருந்த யானையே யாகும். கிழவர் குழந்தை என்ற வேறுபாடின்றி எல்லோரும் யானையைச் சுற்றி நின்றனர். ஆனால் மணிவண்ணன் கலிக்கண்ணன் என்ற இரு சிறுவர்கள் மட்டும் ஒரு மூலையில் நின்று வாதிட்டுக் கொண்டிருந்தனர். சீதாப் பாட்டி கூட்டம் முழுவதும் தேடிக் கடைசியாகப் பேரப்பிள்ளைகளிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தாள். அப்பொழுது அவர்கள் மிகத் தீவிரமாக வாதிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடைய வழக்கு யானையினுடைய நிறத்தைப் பற்றியது. மணி வண்ணன் யானையினுடைய வலது பக்கத்தைப் பார்த்துவிட்டு 'யானை பச்சை' என்ருன். கலிக்கண்ணன் இடது பக்கத்தைப் பார்த்துவிட்டு 'யானை சிவப்பு' என்ருன். சீதாப்பாட்டி யானையை மறுமுறை பார்த்துவிட்டுத் தீர்ப்புக் கூறினுள். 'நீங்கள் இருவரும் பாதி தவறு, பாதி சரி' என்று கூறினுள். சிறுவர்களுக்குப் பாட்டி சொன்னது விளங்கவில்லை. உடனே பாட்டி மணிவண்ணனை அழைத்து இடது பக்கத்தைக்காட்டி 'யானை சிவப்பு' என்பதைக் காட்டினுள். பின்பு கலிக் கண்ணனை அழைத்து வலது பக்கத்தைக் காட்டி 'யானை பச்சை' என்பதைக் காட்டினுள். இருவரும் யானையின் இருபக்கத்தையும் பார்த்த பிறகு சீதாப்பாட்டியினுடைய வார்த்தைகளை உணர்ந்து கொண்டனர்.

பிரமை பிடித்த குழந்தைகள்

டாம் பிரௌனுக்கு வயது ஏழு. அவனுடைய இயல்பு விசித்திரமானது. சமவயதுக் குழந்தைகளைப்போல அவனால் சரளமாகப் பேசமுடியாது; வாயைத் திறந்தால் பொருளற்ற சில ஒலிகள்தான் கிளம்பும். கூச்சமும் சிடு சிடுப்புமுள்ள அவன் அலாதிச் சுறு சுறுப்புடையவன். பெற்றோர்களுடன் மோட்டாரில் செல்லும்போது, போக்கு வரத்தை ஒழுங்கு செய்யும் பச்சை சிவப்பு விளக்குகளைக் கண்டால் அவன் அச்சமுற்று அலறுவான்.

டாக்டர்கள் அவனைப் பரிசோதனை செய்தார்கள். முழுச் செவிடாகப் பிறக்கும் சில குழந்தைகளுக்குப் பேச்சு வராது. ஆனால் டாம் பிரௌனுக்குக் காதுக்கோளாறு இல்லை! வேறு ஊனமுமில்லை. அவன் ஒருவகைப் பிரமையினால் துயருறுகிறான் என்று டாக்டர்கள் முடிவுக்கு வந்தார்கள். பிரமை என்பது நோய் தானா, அதற்குக் காரணம் என்ன அதைக் குணப்படுத்துவது எப்படி எனப் பல தகவல்களை அறிவதில் பிரிட்டிஷ் வைத்திய விஞ்ஞானிகள் தீவிரக் கவனம் செலுத்துகிறார்கள்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் மில்ரெட் கிரீக் தலைமையில் சில டாக்டர்கள் பிரமைபிடித்த சில குழந்தைகளைப் பரிசோதனை செய்து, பிரமையைக் கண்டுபிடிப்பதற்கு ஒன்பது குறிப்புக்களைத் தொகுத்தார்கள். கல்வியும் சிகிச்சையும் அளித்துப் பிரமையை நீக்கிவிட முடியும் என்று தெரிகிறது.

பிரமைபிடித்த குழந்தைகளுக்கு வசதிகளும் சிகிச்சையும் அளிப்பதற்காக லண்டன் வட்டாரத்தில் வசிக்கும் 35 பெற்றோர்கள் 1962-இல் ஓர் சங்கம் நிறுவினார்கள். பிரமை பிடித்த தங்களுடைய குழந்தைகளுக்கு வசதிகளை வழங்குவதில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதும், அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டு அந்தக் குழந்தைகளைத் திருத்த முயல்வதும் அவர்களுடைய நோக்கம். இன்று இந்தச் சங்கம், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, ஹாலந்து, டென்மார்க், பிரான்ஸ் முதலிய நாடுகளுடன் தொடர்பு கொண்டு செயலாற்றுகிறது.

பிரமை பிடித்த குழந்தைகளுடைய பொறிகள் இணைந்து செயலாற்றாததால் பார்ப்பதையோ கேட்பதையோ மனத்தில் வாங்கிக் கொள்ளும் ஆற்றல் மழுங்கியிருப்பதாகக் கூறுகிறார்கள். பிரமைபிடித்த குழந்தைகள் எவருடனும் பழகாமல் ஒதுங்கியிருக்கும்; மற்றவர்களை வெறித்துப் பார்க்கும்; அல்லது ஒரு கல்லையோ வேறு ஏதாவது ஒரு பொருளையோ கையில் வைத்துக் கொண்டு அதை ஆச்சரியத்துடன் உற்றுப் பார்த்துக்கொண்டேயிருக்கும். உடன் பிறந்தவர்களையோ பெற்றோர்களையோ அடையாளம் தெரிநது கொண்டு அவர்களிடம் அன்பாகப் பழகவும் அந்தக் குழந்தைகளுக்குத் தெரியாது.

பிரமை பிடித்த சில குழந்தைகள் புத்திசாலிகளாக இருப்பதும் உண்டு. அந்தக் குழந்தைகள் இசை அல்லது கணிதத்தில் தனி ஆர்வம் காட்டுவதும் உண்டு. சிறிது பயிற்சியளித்தால் அந்தத்துறையில் தேர்ச்சி பெற்று விளங்குவதும் உண்டு.

பிரமை பிடித்த குழந்தைகளுக்கு இது வரையில் வைத்தியச் சிகிச்சை ஏதும் கண்டுபிடிக்கவில்லை. அவர்களுடைய உளப்பாங்கைக் கணித்தல், பயிற்சிமூலம் அவர்களைச் சீர்திருத்த முயலுதல் இவை எல்லாம் ஆரம்பக் கட்டத்தில்தான் இருக்கின்றன. ஆனல் ஒரு குழந்தையின் தன்மையை அறிந்து குறையை நீக்குவதற்கு ஏற்றமுறையில் திட்டம் அமைத்துக் கொண்டும் கல்விப் பயிற்சி அளித்தால் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கை உறுதிப்பட்டிருக்கிறது. இம் மாதிரி பயிற்சிபெறும் குழந்தைகளுடன் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்ட டாம் பிரௌனை, அவனுடைய பெற்ளோர்கள் விட்டு வைத்திருக்கிருர்கள். இப்போது அவனுக்கு ஒன்பது வயதாகிறது. இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றதன் விளைவாக, இப்போது அவனல் எழுத்துக்களைக் கூட்டிப்படிக்க முடியும். கேட்கும் வினக்களுக்கு விடையளிக்க முடியும். போக்குவரத்தை ஒழுங்கு செய்யும் பச்சை சிவப்பு விளக்குகளைக் கண்டு அவன் இப்போது அஞ்சி அலறுவதில்லை. ஆனல் டாம் பிரௌன் போன்ற குழந்தைகளை மெதுவாகத் தான் திருத்த முடியும். அதற்குப் பொறுமையும் தனிப் பயிற்சியும் தேவை.

பிரமை பிடித்த குழந்தையைத் திருத்துவதற்கு நிதானமும் அவசியம். முதலில் சுற்றுச் சார்பை உணர்ந்து செயலாற்றுவதற்கு அந்தக் குழந்தைக்குப் பயிற்சி தர வேண்டும். கடிதம் அல்லது புத்தகத்தை எப்படிப் பிடித்துக் கொள்வது, சாப்பிடுவது எப்படி என்று எல்லாம் அந்தக் குழந்தைக்குக் கற்றுத்தர வேண்டும். சுற்றுச் சார்பையும் தன்னுடைய உற்ருரையும் ஒரு குழந்தை அறிந்து கொள்வதற்குப் பல மாதகாலம் ஆகலாம். குழந்தைக்குப் பயிற்சிதரும் ஆசிரியர், அதக் குழந்தையின் உளநிலையையும் கிரகிக்கும் சக்தியையும் எடைபோட்டுக்கொண்டு, ஏற்றமுறையில் கற்றுத்தர வேண்டும்.

டாம் பிரௌன் போன்ற சிறுவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக லண்டனுக்கு அருகிலுள்ள ஈலிங்கில் புதிய பள்ளிக்கூடத்தை நாளது செப்டம்பர் மாதத்தில் திறக்கத் திட்டமிட்டிருக்கிருர்கள். பிரமைபிடித்த குழந்தைகளை வைத்தியத்தின் மூலம் குணப்படுத்த முடியாது என்ருலும் பயிற்சிமூலம் குணப்படுத்தலாம் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

பிரதேச ஆராய்ச்சியில் ஈடுபடும் இளைஞர்கள்

இவ்வாண்டில் பிரிட்டிஷ் இளைஞர்கள் உலகின் பல பகுதிகளுக்கு ஆய்வுப் பயணம் செல்கிருர்கள். நீங்கள் எங்கு வசித்தாலும், உங்களுக்கு அருகில் பிரதேச ஆராய்ச்சியிலீடுபட்டுள்ள பிரிட்டிஷ் இளைஞர்கள் சிலர் இருப்பார்கள் என்று ஜான் பர்ந் எழுதுகிருர்.

நடப்பு ஆண்டில் 43 பிரிட்டிஷ் இளைஞர் குழுக்கள் (இவற்றில் உறுப்பினர்கள் எண்ணிக்கை சுமார் 300) சிலி, கிரீன்லாந்து, உகாந்தா முதலிய நாடுகளுக்கு விஞ்ஞான ஆய்வுப் பயணம் செய்கிருர்கள். இவர்கள் அனைவரும் கல்லூரி மாணவர்கள், கேம்பிரிட்ஜ்மாணவர்களில் சிலர் பிரிட்டிஷ் ஹண்டூராஸுக்கும் ஆப்பிரிக்க நாடுகளுக்கும் செல்கிருர்கள்.

ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களில் சிலர் மால்ட்டாவுக்கும் மொராக்கோவுக்கும் செல்கிறார்கள். ஐஸ்லாந்துக்கு ஒரு மாணவர் குழுசெல்கிறது. வடதுருவ வளரொளியைக் காண்பதற்காகச் சில மாணவர்கள் செல்கிறார்கள்.

வடதுருவ மண்டலமும், தென்துருவ மண்டலமும் பிரிட்டிஷ் இளைஞர்களைக் கவர்ந்துள. சென்ற ஐந்து ஆண்டுகளில் 62 குழுக்கள் துருவ மண்டலங்களுக்குச் சென்றிருக்கின்றன. பிறநாடுகளுக்குச் சென்ற குழுக்களின் எண்ணிக்கை வருமாறு: ஆப்பிரிக்க நாடுகள் - 40 ; தெற்கு அமெரிக்க நாடுகள் - 21 ; மத்தியக் கிழக்கு நாடுகள் – 19 ; இந்தியா 14; மத்தியத்தரைக்கடல் பிரதேசம் - 12; ஸயாம், மேற்கு இந்தியத் தீவுகள் முதலிய நாடுகளுக்கும் சில இளைஞர் குழுக்கள் சென்றது உண்டு.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இளைஞர்கள் பிரதேச ஆராய்ச்சி தவிர, பூகர்ப்பவியல், தாவரவியல், விலங்கியல் எனப் பல துறைகளிலும் ஆய்வு செய்கிறார்கள். பனிப்பாறைகளுடைய இயல்பைத் தெரிந்து கொள்வதற்காகச் சில மாணவர்கள் சென்றார்கள். தொல்பொருளாராய்ச்சி, விவசாயம், மனிதஇன வரலாறு, வனவளம் எனப் பலதுறைகளில் ஈடுபாட்டுடன் ஆய்வு நடத்தும் இளைஞர்களும் உண்டு.

விஞ்ஞான ஆய்வுப் பயணம் செய்யும் இளைஞர்கள், அங்கங்கிருந்து தகவல்களையும் மாதிரிப் பொருள்களையும் சேகரித்துக் கொண்டு திரும்பிய பிறகு, ஆற்றிய பணியைப்பற்றித் தரமான அறிக்கைகளைத் தயாரிக்கிறார்கள். சில மாணவர்கள் டாக்டர் பட்டம் பெறும் நோக்கத்துடன் ஆய்வுப் பயணம் செய்து தங்களுடைய அனுபவங்களைப் பற்றிக் கட்டுரைகள் எழுதுகிறார்கள். விஞ்ஞானப் பணிக்குச் சார்புடைய கட்டுரைகளைச் சில மாணவர்கள் வழங்குகிறார்கள். காமன்வெல்த் மைகாலாஜிகல் இன்ஸ்டிட்யூட், நார்வீஜியன் போலார் இன்ஸ்டிட்யூட் முதலிய கழகங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த இளைஞர்களுடைய அறிக்கைகளையும் கட்டுரைகளையும் அக்கறையுடன் படிக்கிறார்கள் என்றால் இவற்றின் தரத்தை ஊகித்துக் கொள்ளலாம் அல்லவா?

ஆய்வுப் பயணம் செய்து திரும்பும் இளைஞர்கள் கொண்டுவரும் எரிமலைக் கற்கள், தாவரங்கள், பூச்சிகள், விலங்குகள், பறவைகள் முதலியவற்றை லண்டனிலுள்ள நாசுரல் ஹிஸ்டரி மியூஸியம், ஸூலாஜிகல் சொசைடி ஆல் லண்டன், ராயல் பொடானிகல் கார்டன் முதலிய உலகப் புகழ்பெற்ற நிறுவனங்கள் உவப்புடன் ஏற்றுக்கொள்கின்றன. மத்திய இங்கிலாந்திலுள்ள ஓர் மிருகக் காட்சிசாலை, 1963 இல் ஸியாரா லியோனுக்கு உலாச்சென்ற சில பிரிட்டிஷ் மாணவர்கள் ஃபிரீ டவுனில் ஓர் சீறும் பாம்பைப் பிடித்துவந்து தந்தார்கள் என்று பெருமைப்படுகிறது. சென்ற ஆண்டு ஆப்பிரிகாவுக்குச் சென்ற பிரிட்டிஷ் இளைஞர்கள் ஸ்பானிஷ் கினியைச் சேர்ந்த தீவில் புதரில் வாழும் சிறிய இனக் குரங்கு ஒன்றை லண்டன் மிருகக் காட்சிசாலைக்குத் தந்தார்கள். இந்த இனத்தைச் சேர்ந்தவேறு சில விலங்குகளைச் சேகரிப்பதற்காக இப்போது அவர்கள் ஸ்பானிஷ் கினியில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள்.

ஆராய்ச்சி நோக்குடன் வெளிநாடுகளுக்குச் செல்லும் இளைஞர்கள், பய

மின்றிக் காடுகளிலும் மலைகளிலும் சுற்று கிறார்கள்; வேட்டையாடுகிறார்கள். இவர்களில் சிலர் ஆராய்ச்சிக்காகத் தேள்களைச் சேகரித்தார்கள். இலங்கையில் ஓர் முதலையை உயிருடன் பிடித்து இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள். ஆராய்ச்சி உலாச் செல்லும் மாணவர்களில் சிலர் தங்களுடைய தேவைக்கேற்ற சாதனங்களைத் தாங்களே தயாரித்துக் கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. லண்டனிலுள்ள இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த இரு மாணவர்கள் பனிவெட்டும் கோடரிக் காம்பில் இணைத்துவிடக் கூடிய 'காமெரா ஸ்டான்டு' ஒன்றைக் கண்டு பிடித்தார்கள். இது பயன்மிக்க சாதனமாக இருப்பதால், பிரிட்டிஷ் ஜியாகிராஃபிகல் சொசைடியும் பிரிட்டிஷ்-ஆஸ்திரேலியா தென்துருவ மண்டல ஆராய்ச்சிக் குழுவினரும் இந்தச் சாதனத்தைக் கோரித் தேவைக்கட்டளை அனுப்பியிருக்கிறார்கள்.

விலை உயர்ந்த சாதனங்களை வாங்குவதும் அவற்றை எடுத்துச் செல்வதும் உலாச் செல்லும் மாணவர்களுடைய சக்திக்கு மீறியதாகும். உலாவில் சேகரித்த தகவல்களைப்பற்றிய அறிக்கையைக் கொடுக்க இசையும் மாணவர்களுக்குத் தங்களுடைய சாதனங்களைச் சலுகை விலைக்கு அளிக்க பிரிட்டிஷ் உற்பத்தியாளர்களில் பலர் முன் வருகிறார்கள் என்றாலும், மாணவர் குழுக்களின் எண்ணிக்கை பெருகி வருவதால், தேவைப்படும் நிதியைத் திரட்டுவது ஒரு பிரச்சினையாகத்தான் இருக்கிறது. பிரிட்டனில் 16 பல் கலைக்கழகங்களில் பிரதேச ஆராய்ச்சிச் சங்கங்கள் உள. இவற்றில் சில இரண்டாவது உலகப் போருக்கு முன்பிருந்தே செயலாற்றி வருகின்றன. லண்டனில் பிரதேச ஆராய்ச்சிச் சங்கங்கள் ஐந்து உண்டு இவை தவிர பிரிட்டிஷ் ஸ்கூல்ஸ் எக்ஸ்புளொரேஷன் சொசைடி என்று ஒரு சங்கம் செயலாற்றுகிறது. இந்தச் சங்கத்தின் ஆதரவில் ஏழு குழுக்கள் ஜோர்டான், லாப்லாந்து, ஈரான் முதலிய நாடுகளுக்கு அண்மையில் புறப்பட்டன.

மாணவர்கள், சொந்த முயற்சியில் தங்களுடைய பிரயாணச் செலவுக்குத் தேவையான நிதியைத் திரட்டுகிறார்கள் என்றாலும், தங்களுடைய பல்கலைக் கழகத்திடமும் ராயல் ஜியாகிராஃபிகல் சொசைடியிடமும் மான்ய உதவி கோருகிறார்கள். உலாத் திட்டத்தைச் சிறப்புற அமைத்தால்தான் பல்கலைக்கழகங்களுடைய மூத்த உறுப்பினர்களும் ஜியாகிராஃபிகல் சொசைடியும் ஒப்புதல் அளிப்பார்கள். பிரதேச ஆய்வுப் பயணம் செய்யும் மாணவர்களுக்கு அனுபவமில்லாவிட்டாலும், துணிவும் திறனும் பொறுப்பும் கச்சிதமானதொரு திட்டமும் இருப்பது அவசியம். ஆய்வுப் பயணம் செல்ல விரும்பும் மாணவர்கள் தங்களுடைய திட்டத்தைப்பற்றி அறிவிப்பதுடன் ஜியாகிராஃபிகல் சொசைடியின் தேர்வாளர்களைப் பேட்டிகாணல் வேண்டும். தென்துருவ மண்டலப் பிரதேச ஆராய்ச்சியில் புகழ்பெற்ற ஸர் விவியன் ஃபுஷ் போன்ற சான்றோர்கள் தேர்வாளர்களாக அமர்ந்து மாணவர் தலைவர்களை விசாரிப்பார்கள். நடப்பு ஆண்டில் தேர்வாளர்கள் நுணுக்கமாகப் பரிசீலித்து உதவி கோரிய மனுக்களில் பாதியை ஒதுக்கிவிட்டார்கள்.

உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைக்கக்கூடிய ஆய்வுப் பயணத் திட்டங்களுக்கே ஜியாகிராஃபிகல்

சொசைடி ஊக்கமளிப்பது குறிப்பிடத் தக்கது. வால்ட்டா நதிப் பிரதேச அபி விருத்தித் திட்டத்திஞலேற்பட்ட சமுதாய ஆதாயத்தை மதிப்பீடு செய்வதற்காக ஒரு பிரிட்டிஷ் இளைஞர் குழுவினர் இம்மாதம் புறப்படுகிருர்கள். இவர்களுடன் அக்கரா இளைஞர்கள் இருவர் உழைப்பார்கள். இந்தப் பிரிட்டிஷ் இளைஞர்கள் குழுவின் தலைவர் ஏற்கனவே காஞவில் தொண்டாற்றியவர். எதியோபியாவில் ஓர் கிராம ஆய்வு நடத்தச் செல்லும் சில பிரிட்டிஷ் மாணவர்களுக்கு அடிஸ் அபாபா காலேஜைச் சேர்ந்த சில மாணவர்கள் உதவியளிப்பார்கள்.

வெளிநாடுகளுக்கு ஆய்வுப் பயணம் செல்வதால் பிரிட்டிஷ் இளைஞர்களுக்கு அனுபவமும் பண்பும் ஏற்படுகின்றன. "புதிய இடங்களுக்குச் சென்று புதிய ஆராய்ச்சிகளைச் செய்யவேண்டும் என்ற அவா இன்றைய பிரிட்டிஷ் இளைஞர்களுக்கு அதிகம், விஞ்ஞான ஆர்வம் இருந்தாலும், துணிகரச் செயல்களில் ஈடுபாடு காரணமாகப் பலப்பல நாடுகளுக்குச்செல்லவேண்டும் என்ற அவாவும் அவர்களுக்கு இருக்கிறது இவர்களுடைய ஆர்வத்திற்குத் தொடர்ந்து ஆதரவு காட்டுவது அவசியம் என்று ராயல் ஜியாகிரபிஃபிகல் சொசைடியின் டைரக்டர் திரு. எல். பி, கிர்வான் கூறுகிருர்.

வித்யா விஞேதினி பரீட்சைக்கான அங்கீகாரம் வாபஸ்

உத்தியோக நியமன காரியங்களுக்காக, அலஹாபாதிலுள்ள பிரயாக் மகிளா வித்யா விஞேதினி பரீட்சைக்கு அளிக்கப்பட்டிருந்த அங்கீகாரத்தை இந்திய சர்க்கார் உடனடியாக வாபஸ் பெற்றுவிட்டிருக்கின்றனர்.

யூனியன் கல்வி மந்திராலயம், யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் ஆகியவற்றுடன் கலந்தாலோசிக்கப்பட்டே இம் முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; 1960 மே மாதத்துக்குப் பிறகு நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கு இது பிரயோகமாகும்.

தற்போது இரண்டு போட்டி ஸ்தாபனங்கள், அலஹாபாதில் தங்களுடைய காரியாலயங்களை வைத்துக்கொண்டு, "பிரயாக் மகிளா வித்யாபீடம்" என்ற பெயரில் வித்யா விஞேதினி பரீட்சையை நடத்திவருவதும், வெற்றி பெறும் மாணவர்களுக்கு அத்தாட்சிப்பத்திரங்கள் வழங்கிவருவதும் சர்க்காரின் கவனத்துக்கு வந்திருக்கின்றன. அப் பரீட்சையின் தரமும் குறைந்துவிட்டிருக்கிறது.

ஆசிரியர்கட்குக் கட்டுரைப் போட்டி அறிவிப்பு

ஆசிரியர் தொடர்ச்சிக் கல்வித்திட்ட இலாக்கா தலைமையாசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்ற ஒரு கட்டுரைப் போட்டியினை நடத்துமாறு அறிவித்துள்ளது. தலைமை யாசிரியர்களும், ஆசிரியர்களும் பட்டறிவின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ள பதின்மூன்று தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றைப் பற்றியோ, பலவற்றைப் பற்றியோ இரண்டாயிரம் சொற்களிலிருந்து இரண்டாயிரத்து ஐந்நூறு சொற்கள் வரை கட்டுரைகளை வரைந்து அனுப்பலாம். முதல்தரக் கட்டுரைகள் பத்திற்கு, ஒவ்வொன்றிற்கு ரூ.750 வீதமும் இரண்டாந்தரக் கட்டுரைகளில் சிறப்பான பத்திற்கு ரூ.500 வீதமும், மூன்றுந்தரச் சிறப்பான கட்டுரைகளுக்கு ரூ. 250 வீதமும் தேசியப் போட்டியில் பரிசளிக்கப்படும். கட்டுரைகள் ஆங்கிலத்திலோ, நம் நாட்டு மொழிகள் ஏதேனும் ஒன்றிலோ இருக்கலாம். இப்போட்டி முடிவுத் தேதி செப்டம்பர் 15, 1965. இதுபற்றிய முழு விபரங்கள் வேண்டுவோர் கோ-ஆர்டிலேட்டர், விரிவுப் பணித்துறை, டாக்டர் அழகப்பச் செட்டியார் ஆசிரியர் கல்லூரி காரைக்குடி-3 என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஓர் அறிவிப்பு

ஆசிரியர்கள் கல்வி தொடர்பான செய்திகளைத் தெரிந்து கொள்ளவும், பொருத்தமான கருத்துக்களைத் திருத்தமாக வெளியிடவும் விரும்பினால், தென்னிந்திய ஆசிரியர்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் திகழும் திருவாளர் மரியப்பிரகாசம் J. P. அவர்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைந்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அமல நிலையம்

6, கச்சேரி ரோடு,
மயிலை, சென்னை-4.

எகோ (ECHO)

(EDUCATION ECHO) 1965 ஜூலை வெளியீடு

கல்வி எதிரொலி (Education Echo) ஆசிரியத் தொழில் தொடர்பான சங்கங்களின் உலகக் கூட்டிணைப்பு (world confederation of Organizations of the Teaching profession, WCOTP, 'விக்டாப்')

பெர்முடாவைச் சேர்ந்த பெண்மணிக்கு ரஸ்ஸல் பரிசு; 400-பேர்கள் கூட்டத்திற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒன்று சேர்க்கப்பட்ட பெர்முடா ஆசிரியர்ச் சங்கத்தின் (Amalgamated Bermuda union of Teachers) தலைவியாக விளங்கும் செல்வி ஈவா ஹாட்ஜ்சன் அவர்கள், 1965-ஆம் ஆண்டுக்கான வில்லியம் F ரஸ்ஸல் பரிசைப் பெறுவதற்குத் தகுதியுடையவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இப் பரிசு ஆசிரியர்களிடையே ஒற்றுமையை வளர்க்கப் பாடுபட்ட டாக்கர் ரஸ்ஸல் அவர்கள் சேவையின் நினைவாகத் தரப்படுகிறது. இப்பரிசைப் பெறுவோர் உலக ஆசிரியர் மாநாட்டிற்கு வானூர்தியில் அழைத்துச் செல்லப்படுவார். இம்மாநாடு, இவ்வாண்டு எதியோப்பியாவின் தலைநகரான ஆடிஸ் அபாபாவில், ஜூலைத் திங்கள் 31-ஆம் நாளிலிருந்து, ஆகஸ்டுத் திங்கள் 7-ஆம் நாள்வரை நடைபெறும்.

வில்லியம் F. ரஸ்ஸல் பரிசுபெறத் தகுதியுடையோர் எனத் தயாரிக்கப்பட்டிருந்த பட்டியிலிருந்து, 'விக்டாப்' செயல் நிறைவேற்று குழு (WCOTP Executive committee) செல்வி ஹாட்ஜ்சனைத் தேர்ந்தெடுத்துள்ளது. அண்மையில் தான் இவ்வம்மையார் ஒன்று சேர்க்கப்பட்ட பெர்முடா ஆசிரியர்ச் சங்கத்தின் தலைவியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். முன்பு இன அடிப்படையில் தனித்தனி இயங்கிவந்த இருவேறு சங்கங்களின் சேர்க்கையே ஒன்று சேர்க்கப் பட்ட பெர்முடா ஆசிரியர்ச் சங்கம். எழுபது நாடுகளிலிருந்து வரும். ஏறத்தாழ முந்நூறு பேராட்கள் (Delegates) 'விக்டாப்' நடத்தும் 4-ஆம் கூட்டத்தில் கலந்துகொள்வதாகத் தெரிவித்துள்ளனர். கூட்டத்தின் பொருள் 'கல்வியின் மூலம் சமவாய்ப்பு' (Equal Opportunity Through Education) என்பதாகும்.

ஆப்பிரிக்கக் கூடத்தில் (Africa Hall) நடைபெறவிருக்கும் மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சிகள் இவை.

1 மேன்மை தங்கிய எதியோப்பியப் பேரரசர் முதலாம் ஹைலி சலாசி அவர்களின் வரவேற்புரை.

2. சர். ரோனல்ட் கோல்ட் அவர்களின் தலைமையுரை.

3. இடைத்தரக் கல்வியாசிரியர்களின் பன்னாட்டுக் கூட்டிணைப்பின் தலைமைச் செயலாளர் (Secretary general of the International Federation of Secondary Teachers) A. W. S. ஹட்சிங்ஸ் அவர்களின் 1965-ஆம் ஆண்டுக் கான பொருள் பற்றிய உரை.

(4) 'விக்டாப்' தலைமைச் செயலாளர் வில்லியம் G. கார் அவர்களின் 1966-ஆம் ஆண்டுக்கான மாநாட்டுப் பொருள் பற்றிய முன்னுரைப் பேச்சு.

பேராள் கூட்டத்திற்கு முன்பு, ஜூலைத் திங்கள் 26-ஆம் நாளிலிருந்து 29-ஆம் நாள்வரை, உகாண்டாவிலுள்ள உகாண்டா ஆசிரியர்ச் சங்கம், (Uganda Teachers' Association) கல்வி நிறுவனம் (Institute of Education) ஆகிய சங்கங்களின் ஒத்துழைப்போடு, காண்டல், கேட்டல் கல்வி தொடர்பான 'விக்டாப்' தனிப் பயிற்சிக்குழு (WCOTP Specialized Committee on Audio-visual Education) தொழிற்சாலை ஒன்றை நடத்தும்.

'விக்டாப்பில்' அங்கம் வகிக்கின்ற, உடல் நலம், உடற்பயிற்சிக் கல்வி பொழுதுபோக்குத் தொடர்பான பன்னாட்டுக் குழுவின் (International Council on Health, Physical Education and Recreation) எட்டாவது பன்னாட்டுக் கூட்டமும் 'விக்டாப்' பேராள் கூட்டத்திற்கு முன் ஜூலைத் திங்கள் 27-ஆம் நாளிலிருந்து 31-ஆம் நாள் வரை, ஆடிஸ் அபாபாவில் நடைபெறும். 'கல்வியின் மூலம் சம வாய்ப்பு-உடல் நலம், உடற்பயிற்சிக் கல்வி, பொழுதுபோக்கு ஆகியவற்றிற்கோர் அறைகூவல்' என்னும் பொருள் பற்றி இங்குப் பேசப்படும்.

'விக்டாப்பின்' வேறு உறுப்பினர்களான கற்பித்தலுக்காகவுள்ள பன்னாட்டுக் கல்விக் குழுவும், (International Council on Education for Teaching) பன்னாட்டுப் படித்தல் சங்கமும் ஜூலைத் (The International Reading Association) திங்கள் 5-ஆம் நாள் தங்கள் கூட்டங்களை நடத்தும்.

'விக்டாப்' பேராள் கூட்டத்தின் முக்கியச் சொற்பொழிவுகளும், 1965-ஆம் ஆண்டுக்கான பொருள்பற்றிய அறிக்கைகளின் தொகுப்புக்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட அறிக்கைகளும் 'கல்வி நிறை காட்சி' (Education Panorama) என்னும் பத்திரிக்கையின் மலர்-7, இதழ் 3-ல், மாநாடு முடிந்த சின்னாட்களுக்குள் வெளியிடப்படும்.

செப்டம்பர், அக்டோபர் ஆகிய இரண்டு மாதங்களில் வெளிவரும் 'எதிரொலி' இதழ்களில் மாநாடு தொடர்பான இன்றியமையாச் செய்திகளும், விக்டாப்' பன்னாட்டு உறுப்பினர்களின் கூட்ட அறிக்கைகளும், தனிப் பயிற்சிக் குழுக்களின் அறிக்கைகளும் வெளியிடப்படும்.

∴ ∴ ∴

'விக்டாப்பும்', 'யுனெஸ்கோவும்' (பன்னாட்டுக் கல்வி விஞ்ஞானக் கலாச்சார அமைப்பு) அறியாமையை ஒழிக்கும் பணியில் ஆசிரியர்களின் பங்கென்ன என்பது பற்றி ஆராய்கின்றன.

1. தாய்லாந்திலும், கென்யாவிலும் தேசிய எழுததறிவு பரப்பு திட்டத்தில் ஆசிரிய அமைப்பின் பங்கென்ன என்பது பற்றி முடிவு கட்ட 'விக்டாப்பும்' 'யுனெஸ்கோவும்' ஒன்று கூடி ஆராய்கின்றன.

2. இவ்வாராய்ச்சி சம்பந்தமான அறிக்கைகள், ஆடிஸ் அபாபாவில் ஆகஸ்டில் நடக்கவிருக்கும் 'விக்டாப்' பேராள் கூட்டத்திலும், அக்கூட்டத்தைத் தொடர்ந்து நடக்கும் ஐந்தாவது பன்னாட்டு முதியோர் கல்வி மாநாட்டிலும் (Fifth International Adult Education Conference) சமர்ப்பிக்கப்படும்.

3. மனிலாவிலுள்ள, பொதுப்பள்ளிக் கூடங்களின் பணிமனையைச் (Bureau) சார்ந்த, சமுதாய, முதியோர் கல்விப் பிரிவின் உதவித் தலைவராக (Asst. Chief of the Division of Adult and Community Education, Bureau of public Schools in Manila) உள்ள, பிலிப்பைன்சைச் சேர்ந்த, ஆர்ட்டிமிரியா சி விஸ்காண்டே என்பவரால் தாய்லாந்தில் இவ்வாராய்ச்சி நடத்தப்படும்.

4. சியர்ரா லியோனி, ஃப்ரிடவுனிலுள்ள பல்கலைக் கழக எல்லைக்குப் புறம்பான கல்வியின் இயக்குநராகவுள்ள (Director of Extra Mural Studies, University College, Free Town, Sierra Leone) கிரிஸ்டியன் கோல் என்பவரால் கென்யாவில் இவ்வாராய்ச்சி நடத்தப்படும்.

5. உள்ளூர் ஆசிரியச் சங்கங்களுடனும், முதியோர் கல்வி அதிகாரிகளுடனும் உழைத்தற்கு இவ்விரு ஆலோசர்களும் இந்த நாடுகளில் 14 நாட்களிலிருந்து 21 நாட்கள் வரை சுற்றுப்பயணம் செய்வார்கள்.

6. அவர்களுடைய ஆராய்ச்சிகளின் விளைவாக, இவ்விரு நாடுகளில் அறியாமையை ஒழித்தற்கு ஆசிரியர்களிடமிருந்து எவ்வாறு அதிக அளவு ஒத்துழைப்புப் பெறலாம் என்பது பற்றி உருப்படியான புதுக்கருத்துகள் தெரிவிக்கப்படும்.

7. இவ்விருவரின் கண்டு பிடிப்புக்கள் 'விக்டாப்பிற்கும்' அதில் அங்கம் வகிக்கும் சங்கங்களுக்கும் அறியாமையை ஒழித்தற்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

'விக்டாப்' தலைமைச் செயலாளரின் மடல்

'விக்டாப்' தலைமைச் செயலாளர் வில்லியம் G. கார் எல் சால்வடாரிலும், டோமினிகன் குடியரசிலும் உள்ள ஆசிரியர்ச் சங்கங்களின் தலைவர்களுக்கு மடல்கள் வரைந்துள்ளார்; அம்மடல்களில், அவ்விரு நாட்டு ஆசிரியர்களின் நல்வாழ்வில் அவருக்குள்ள அக்கரையைப் புலப்படுத்தியுள்ளார்.

எல்சால்வடாரில் இயங்கும் ஆசிரியர்ச் சங்கம் ஒன்றின் (Solidaridad de Maestras Salvadoreñas) தலைமைச் செயலாளருக்கு டாக்டர் கார் எழுதிய மடலில், நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும், மக்களுக்கும் 'விக்டாப்பின்' அனுதாபத்தையும், அதில் அங்கம் வகிக்கும் சங்கங்களின் அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

'விக்டாப்' தலைமைச் செயலாளர் ஃபெனுமாவின் (FENAMA) தலைவருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் அவர் டோமினிகன் குடியரசின் தற்போதைய சூழ்நிலையால் ஏற்படும் நீண்ட, குறுகிய கால விளைவுகள் ஃபெனுமாவை எவ்விதத்தில் பாதிக்குமோ என்ற தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பா .. ..

'விக்டாப்' செயல் நிறைவேற்று குழுவின் உறுப்பினராகவுள்ள ஈரிக் பிரிஸ்டர் என்ற செர்மானியர் பெர்லின்-நியூகால்ன் நகராண்மைக் கழகப் போர்டில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டுள்ளார். 275,000 மக்கள் வாழும் பெர்லினிலுள்ள ஒரு மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கும், முதியோர் கல்விக்கும், கலாச்சார நிகழ்ச்சிகளுக்கும் நகராண்மைக் கழகப் போர்டின் உறுப்பினர் என்ற முறையில் அவர் பொறுப்பாளியாவார்.

திருவாளர் பிரிஸ்டருக்குக் கிடைத்துள்ள புதுப் பதவியின் காரணமாக அவர் இப்போது ஜெர்மன் ஆசிரியர்ச் சங்கத்தின் தலைவராக இல்லை. எனினும் அவர் 'விக்டாப்போடு' இணைக்கப்பட்டுள்ள ஜெர்மன் கல்வியமைப்பு ஒன்றின் (Arbeitsgemeinschaft Deutscher Lehrerverbande) துணைத் தலைவராக இன்னும் இருக்கிறார்.

பிரிட்டன் தேசத்தில் பயணம் செய்து, பள்ளி செல்லும் குழந்தைகளைப் பசியினின்று எவ்வாறு விடுவிப்பது என்பதை ஆராய, 'விக்டாப்', ஆம்ஸ்டர் டாமைச் சேர்ந்த K. சாகல் என்பவரை நியமித்துள்ளது. 'விக்டாப்பில் அங்கம் வகிக்கும் நெதர்லாந்தைச் சார்ந்த சங்கம் (Nederlandse Onderwijzersvereniging) ஒன்றினால் அவர் பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

பிரிட்டனிலுள்ள பள்ளிக் கூடங்களிலும், பயிற்சிக் கல்லூரிகளிலும், மற்றுமுள்ள கல்வி நிறுவனங்களிலும் பசியினின்று விடுதலை என்ற கொள்கை எவ்வாறு உண்மையில் செயல் படுத்தப்படுகிறது என்பதை நேரில் கண்டறிவதே இவ்வாராய்ச்சிப் பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.

இவ்வாராய்ச்சிப் பயணம் செல்லும் குழுவில் கல்வி வல்லுநர்களும், கல்வி நிருவாகிகளும் ஐரோப்பிய FFHC குழுக்களோடு பணிபுரியும் ஆசிரியர்களும் உள்ளனர். ஐரோப்பாவுக்கு அப்பாலுள்ள சில FFHC குழுக்களின் பிரதிநிதிகளும், ஐக்கிய நாட்டு அமைப்பின் கீழ் இயங்கிவரும் FAO, unesco போன்ற தனிப் பயிற்சிச் செயலாண்மை நிலையங்களாலும் பன்னாட்டு அரசு சார்பிலா அமைப்புக்களாலும் அனுப்பப்படும் பார்வையாளர்களும், மேற்குறித்த ஆராய்ச்சிப் பயணக் குழுவினரோடு செல்லுவார்கள். பிரான்ஸ் நாட்டினரான இடைத்தரக் கல்வி யாசிரியர்களும், தொழிற் கல்வியாசிரியர்களும், ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களும் ஒரு சில நிருவாகப் பணிகளைச் செய்ய மறுத்து விட்டனர்; பள்ளிக் கூடங்களை மேல் நிலைக்குக் கொண்டுவரப் பெற்றோர்களுக்கு நேரடியாக வேண்டுகோளும் விடுத்துள்ளனர். 'விக்டாப்பில்' அங்கம் வகிக்கும் இரண்டு அமைப்புக்கள் (syndicat national de l'enseignement secondaire and the syndicat national des professeurs des ecoles normales) இச் செயலில் பங்கு கொள்கின்றன.

ஒவ்வொரு வகுப்பிலும் பிள்ளைகளின் எண்ணிக்கை 30-லிருந்து 50-வரை உயருவது கல்வி முன்னேற்றத்தைப் பாதிக்கும் என்று மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இக்குறையைப் போக்குவதற்கு ஆசிரியர்கள் பெருமளவில் வேலைக்கு அமர்த்தப்படவேண்டும் என்றும், ஆயிரம் மாணவர்கள் பயிலக்கூடிய, பல்விதப் பயிற்சிகள் கொண்ட இடைத்தரப் பள்ளிக் கூடங்கள் நாடெங்கிலும் கட்டப்பட வேண்டும் என்றும் ஆசிரியர்கள் அவ்வேண்டுகோளில் குறித்துள்ளனர்.

தேசியக் கல்வித் திட்டம் சீர்திருத்தி யமைக்கப்பட வேண்டும் என்றும், எல்லாக் குழந்தைகளுக்கும், அவர்கள் எதுவரை படிக்க வேண்டும் என்று விரும்புகிருர்களோ அது வரை தங்கள் படிப்பைத் தொடர வாய்ப்புக் கொடுக்கப் படவேண்டும் என்றும் பிரஞ்சு ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இடைத் தரக் கல்வி நிலையில், நாளுக்கு நாள் மாணவர்கள் நடைமுறை நிலைமைகள் மோசமாகிக் கொண்டு வருவதைத் தடுக்க, கல்வி அமைச்சரகத்தால் நியமிக்கப்பட்ட குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட, அறிக்கையின் அடிப்படையில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று அவ்வாசிரியர்கள் கேட்டுக் கொண்டனர்.

ஆப்பிரிக்கா ....

யூனிகோவின் (UNECO) தலைமைச் செயலாளரும் முன்னாள் 'விக்டாப்' செயல் நிறைவேற்று குழுவின் உறுப்பினருமான ஜோசப் பென்சா-டுபி காங்கோ நாட்டின் சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக 'விக்டாப்'



தலைமைச் செயலாளருக்குச் செய்தி கிடைத்துள்ளது. ஜனவரியில் தனது முதலாம் ஆண்டினை எய்திய, ஆசிரியர் அமைப்பின், தலைவராக அவர் தொடர்ந்து இருப்பார். லியாபோல்டுவில்லியில் நடந்த ஆண்டு விழாவில், உயர்திரு பென்சா-டுபி அவர்கள் யூனிகோவின் வரலாற்றையும் சாதனைகளையும் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

ஆசிரியர்களின் தொழில், சமுதாய, பொருளாதார நிலையை ஒருநிலைப் படுத்தல், ஆசிரியர்களின் சம்பளம் சம்பந்தமான ஆணையொன்றைப் பிறப்பித்து அதனைச் செயற்படுத்தல், கடந்த மாதச் சம்பளத்தை இந்த மாதத்திலேயே தருதல், கடாங்கா ஆசிரியர்களுக்குச் சாதகமாகக் குறுக்கிடுதல், மாகாணங்களிலுள்ள

ஒப்பந்த ஆசிரியர்களின் வருந்தத்தக்க பிரச்சினையைத் தீர்த்தல், புதிய கல்வி யமைச்சருக்கு நாட்டின் கல்வி நிலையை விளக்கிடும் விண்ணப்பம் ஒன்று தருதல் ஆகிய முக்கியப் பிரச்சினைகளில் யூனிகோ ஆர்வங்காட்டி உழைக்கிறது என்று அவர் ஆண்டு விழாக் கூட்டத்தில் கூறினர்.

'யூனிகோ' நிறுவப்பட்டதிலிருந்தே வேலையிலிருக்கும் ஆசிரியர்களைப், பள்ளித் தலைவர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் ஆக்கும் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப் படுகின்றன என்று உயர்திரு பென்சா—டுபி சங்க உறுப்பினர்களுக்கு நினைவு படுத்தும் வகையில் எடுத்துக் கூறினர்.

ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலைமை தருதல், கல்வித் துறையிலுள்ள தலைவர்கள், மேற்பார்வையாளர்கள், ஒப்பந்த ஆசிரியர்கள் நிலைம்மையை உயர்த்துதல், வேலையிலிருக்கும் போதே பயிற்சி யளித்தல், பெற்றோர்களுடனும், கல்வியதிகாரிகளுடனும், ஒத்துழைத்தல், முதியோர் கல்வி நல்கல், ஆசிரியர்களிடையே ஒற்றுமையை ஓங்கச் செய்தல் ஆகிய யாவும் நடைமுறை 'யூனிகோ' திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளன.

இந்தக் கோடையில் கனடியன் ஆசிரியர்க் கூட்டிணைப்பின் ஆப்பிரிக்கத் திட்டத்தில் கனடிய ஆசிரியர் பலர் பங்கேற்கின்றனர். உகாண்டா, கென்யா, ரொடிசியாவிலுள்ள ஆசிரியர்களின் தகுதியை உயர்த்தும் நோக்குடன் 20-லிருந்து 23-ஆசிரியர்கள் வரை இந்நாடுகளில் பயணம் செய்வார்கள்.

1965 ஆம் ஆண்டுக்கான ஆப்பிரிக்கத் திட்டத்தில் பங்கேற்கும் ஆசிரியர்கள் அனைவரும் புகழ்மிக்க பட்டதாரிகள் ஆவார்கள். கனடியன் ஆசிரியர்களின் கூட்டிணைப்பால் நிருவகிக்கப்படும் மாகாண இணைப்புச் சங்கங்கள் இத்திட்டத்திற்கான நிதியைத் தருகின்றன. இத்திட்டத்தில் பங்கேற்கும் ஆசிரியர்கள் ஆப்பிரிக்காவிற்குச் செல்லுவதற்கு முன்பு கனடியன் ஆசிரியர்க் கூட்டிணைப்பால் நடத்தப்படும் பயிற்சி யொன்றில் கலந்து கொள்வார்கள். இந்தப் பயிற்சியை 'விக்டாப்' சிறப்பு உதவி யதிகாரி ரேமாண்ட் J. ஸ்மைக் நடத்துவார்.

சென்ற ஆண்டு ஆப்பிரிக்கத் திட்டத்தின் கீழ் 18 கனடிய ஆசிரியர் மாளவி உகாண்டா, கென்யா ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

தலைமை நிலையம் ....

திருத்திப் பதிப்பிக்கப்பட்ட 'விக்டாப்' தகவல் புத்தகம் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு புத்தகத்தின் விலை ஒரு டாலர். இதனை வாங்க விரும்புவோர் 'விக்டாப்' செயலகத்திலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

'விக்டாப்பில்' அங்கம் வகிக்கும் சங்கங்களின் வரலாறு, நோக்கங்கள், அலுவலர்கள், வெளியீடுகள், கூட்டங்கள் ஆகியவை பற்றிய தகவல்களும், அச்சங்கங்களை ஆளும் குழுக்களைப் பற்றிய குறிப்புக்களும், பன்னாட்டுத் தொடர்புகள்,

முக்கிய நடவடிக்கைகள் பற்றிய செய்திகளும் இத்தகவல் புத்தகத்தில் திரட்டித் தரப்பட்டுள்ளன.

இத்தகவல் புத்தகம் ஆங்கிலத்தில் மட்டுந்தான் அச்சடிக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலாளர் வில்லியம் ஜி. ஒ. கார் இதற்கு முன்னுரை எழுதியுள்ளார். அம்முன்னுரை ஆங்கிலம், அரபி, ஸ்பானிஷ், பிரஞ்சு ஆகிய மொழிகளில் அமைந்துள்ளது.

தொழிற்கல்வி தொடர்பான 'விக்டாப்' தனிப்பயிற்சிக் குழுவின் முன்னாள் தலைவராக விளங்கிய பிலிப் ஹிக்கி என்பவர் மார்ச் 27 ஆம் நாள் இயற்கை எய்தினர். அமெரிக்காவில் மிசௌரி மாகாணத்தில் செயின்ட் லூயி என்ற இடத்திலுள்ள பள்ளிகளின் மேற்பார்வையாளராக அவர் பணியாற்றி வந்தார்.



அண்மையில் செயலகத்தைப் பார்வையிடச் சென்றவர்களும், 'விக்டாப்பில்'
பணிபுரிவோர்களும் இந்தப் படங்களில் உள்ளனர்.
இடப்பக்கத்தில் உள்ள படத்தில் இடமிருந்து வலமாகப் பார்க்க.

(1) ஆசிரியச் சங்கங்களின் கூட்டுக் குழுவின் தலைவர், (President of the Joint Council of Teachers' Unions) ஸ்ரீ பிரிதாம் சிங் பாகி.

(2) பஞ்சாபைச் சேர்ந்த லூதியானா, சம்ராலா என்ற இடத்திலுள்ள அரசினர் உயர்தர இடைத்தரக் கல்விப் பள்ளியில (Government Higher Secondary School, Samrala, Ludhiana, Punjab State) பணிபுரியும் ஆசிரியர் ஒருவர்.

3. மைசூர் மாநிலம், கோலார் மாவட்டம், கௌரிபிதானூரில் உள்ள நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் தொண்டாற்றும் உயர்திரு N. A. சீனிவாச ஐயங்கார்.

(4) 'விக்டாப்' ஆப்பிரிக்கச் சிறப்பு உதவியாளர் (WCOTP Special Assistant for Africia) ரேமாண்ட் J. ஸ்மைக்,

(5) லக்நவிலுள்ள அரசினர்ப் பயிற்சிக் கல்லூரியின் முதல்வர் (Principal Government Constructive Training College, Lucknow) ஸ்ரீ. போல்நாத்.

6. 'விக்டாப்' தலைமைச் செயலாளர் வில்லியம் G. கார்.

7. சென்னை மாநிலம் வடார்க்காடு மாவட்டம், பெரணம்பேட்டையிலுள்ள இஸ்லாமிய உயர்நிலைப்பள்ளியின் தலைமை யாசிரியர், உயர்திரு C. M. பசலூர் ரஹ்மான். இந்நான்கு இந்தியக் கல்வி வல்லுநர்கள் அமெரிக்காவிலுள்ள கல்வி அமைப்புக்களைக் காண்கின்றனர். ஜுலைத் திங்களில் நியூயார்க்கில் நடைபெற விருக்கும் தேசியக் கல்விச் சங்கத்தின் ஆண்டு விழாக் கூட்டத்திலும் (National Educatiou Association annual Convention) அவர்கள் கலந்து கொள்வார்கள்.

வலப்புறமுள்ள படத்தை இடப்புறமிருந்து வலப்புறமாகப் பார்க்க.

(1) அமெரிக்க ஐக்கிய நாட்டில் பணிபுரியும், மாலிநாட்டின் தூதுவர் மௌசா லியோ கீடா,

(2) மாலியின் மேன்மை தங்கிய கல்வி யமைச்சர் அப்தலேயே சிங்கோர்,

(3) 'விக்டாப்பின்' ஆப்பிரிக்கச் சிறப்பு ஆலோசகர் (WCOTP Special Consultant for Africa) கிளபெர் வைலாட்,

(4) உயர்தர, தொழில் கல்வி இயக்குநர் (Director of Higher and Technical Education) ஜிமிடியாயோ.

(5) 'விக்டாப்' செயலகத்தின் ஓர் உறுப்பினரான ஜூன் பால் சவேரி,

(6) உயர்தர ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் இயக்குநர் (Director of the Higher Teacher Training College) பகாரி காமியன்.

ஆசியா........ ...

இந்தியாவில் ஆசிரியர்களின் நிலைமையை ஆராய்ந்தறிய, 'விக்டாப்'' ஆசிய நிறுவனத்திடமிருந்து (Asia Foundation) மானியம் வாங்கியுள்ளது.



அனைத்திந்தியக் கல்விச் சங்கங்களின் கூட்டிணைப்பு, (All India Federation of Educational Associations) இந்தியக் கல்வி அமைச்சரகம் ஆகியவற்றின்

ஒத்துழைப்போடு, 'விக்டாப்' ஆசிய வட்டார அலுவலகத்தின் (WCOTP Asian Regional Office) இயக்குநராகப் பணிபுரியும் E. W. பிராங்க்ளின் அவர்களால் இவ்வாராய்ச்சி நடத்தப்படுகிறது

நாடெங்கும் தொண்டாற்றும் எல்லா வகையான ஆசிரியர்களைப் பற்றியும் இவ்வாய்வு நடைபெறும். உள்ளூர், மாநில, தேசிய ஆசிரியச் சங்கங்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்யப்படும்.

வினாத்தொகுதி ஒன்று பல்கலைக் கழகங்களுக்கும், ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளுக்கும், ஆசிரிய அமைப்புக்களுக்கும, தனிப்பட்ட ஆசிரியர்களுக்கும், கல்வி இலாக்காக்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் கல்வி முன்னேற்றத்தில் நாட்டமுள்ள நகரப் பெருமக்களுக்கும் அனுப்பப்படும்.

ஒரு தனிப்பட்ட நாட்டினைப் பற்றிய ஆராய்ச்சியில் 'விக்டாப்' இறங்குவது இதுவே முதன் முறையாகும். இதற்கு முனபு ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிகக நாடுகளின் ஆசிரியத் தொழில் நிலைமை பற்றிய ஆராய்ச்சியை இவ்வமைப்பு நடத்தியுள்ளது. இவ்விந்திய ஆராய்ச்சி 18 மாதங்களில் முடியும் என்று கருதப் படுகிறது.

ஆடிஸ் அபாபாவில் நடைபெறவிருக்கும் பேராள் கூட்டத்திற்கு வரும் வழியில் ஆசியக் குழுவைச் சார்ந்த மூன்று உறுப்பினர்கள், இடையிடையே நின்று 'விக்டாப்பில்' அங்கம் வகிக்கும் அமைப்புக்களைப் பார்வையிடத் திட்டமிட்டுள்ளனர். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜான் ஹாரிஸ் என்பவரும். கொரியாவைச் சேர்ந்த டாய் சி சுங் என்பவரும் மலேசியாவைச் சேர்ந்த F. R. பூபாலன் என்பவரும் இவ்வாறு செய்வர்.

கொரியக் கல்விச் சங்கங்களின் கூட்டிணைப்பு (The Korean Federation of Education Associations) கொரியக் கல்விமையம் (Korean Education centre) ஒன்றை நிறுவுவதற்கான பணியைத் தொடங்கிவிட்டது. இக் கூட்டிணைப்பின் செயலகமும் ஒருவர்க் கொருவர் உதவிக்கொள்ளும் சங்கமும், (Mutual Benefit Union) இக்கூட்டிணைப்புடன் இணைக்கப்பட்டுள்ள 12-தனிப் பயிற்சி அமைப்புக்களும், இக்கட்டடத்தில் பணிபுரியும். இங்கிருந்துதான் வாரத் தாளாகக் கொரியக் கல்வி இதழும் (Korean Education Weekly) வெளியிடப்படும். இக்கட்டடம் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும். இங்கேதான் 'விக் டாப்பின்' 15-ஆம் பேராள் கூட்டம் 1966-ஆம் ஆண்டு நடைபெறும்.

ஒரு மண்டபம், ஒரு நூலகம், ஒரு திரைப்படக் காட்சியறை, கூட்டம் நடத் தற்கேற்ற மூன்று அறைகள், இருபதிலிருந்து ஐம்பது பேர்வரை அமரக் கூடிய அலுவலகத்திற்கான இடம், பத்திரிக்கைத் தலையங்கங்கள் வரையக்கூடிய அறைகள், ஒரு பொழுது போக்கு அறை ஆகிய இத்தனையும் இக்கட்டடத்தினுள் இடம் பெறும்.

இக்கட்டடம் கட்ட 114,800,000 வன்கள் (U. S. 425,185 டாலர்கள்) செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணத்தில் 58,000,000 வன்களை மேற்கூறிய கூட்டிணைப்பும், கொரிய ஆசிரியர்களும் நன்கொடையாக வழங்குவார்கள். மீதமுள்ள நிதியைக் கொரிய அரசாங்கம மானியமாக வழங்கும். அந்நிய நாட்டு உதவியும் உண்டு.

நியூசிலாந்திற்கும், தாய்லாந்திற்கும் சென்ற 'விக்டாப்' துணைத் தலைவர் உயர்திரு நடராஜன் அவர்கள் ஆஸ்திரேலியாவில் 4-வாரம் தங்கியிருந்து, ஆங்குள்ள ஆசிரியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு இந்தியா திரும்பினர்.

உயர்திரு நடராஜன் அவர்கள் மே திங்கள் 2-ஆம் நாள் சிட்னி வந்து சேர்ந்தார். அங்கவர் ஆஸ்திரேலிய ஆசிரியர்க் கூட்டிணைப்பின் அலுவலர்களாலும், (Officials of the Australian Teachers' Federation) பொதுநலக் கல்வி அலுவலகத்தின் (Common Wealth Office of Education) பிரதிநிதி ஒருவராலும் வரவேற்கப்பட்டார,

அவர் முதன் முதலில் பிரிஸ்பேனில் தங்கிக் குயின்ஸ்லாந்து ஆசிரியச் சங்கத்தில் சொற்பொழிவு ஆற்றினர்; சிட்னியில் நியூசௌத்வேல்ஸ் ஆசிரியர்க் கூட்டிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கலந்துகொணடார். இதற்குப்பின் அவர் நியூசிலாந்திற்குச் சென்றுர். அங்கு அவர் விருந்தினராகத் தங்கி இருந்து மே 10-ஆம் நாள் நியூசிலாந்து கல்வி நிறுவன மாநாட்டில் (Newzea and Educational Institute Conference) சொற்பொழிவு நிகழ்த்தினர்

உயர்திரு நடராஜன் அவர்கள் ஆஸ்திரேலியாவுக்குத் திருப்பி வந்து லான்ஸ்டனுக்குப் பறந்து சென்றுர். அங்கு அவர் டாஸ்மேனியன் ஆசிரியர்க் கூட்டிணைப்பு மாநாட்டில் (Tasmanian Teachers' Federation open Conference) முக்கியப் பேச்சாளராகக் கலந்துகொண்டார். அடிலேடில் அவர், ஆஸ்திரேலிய ஆகிரியர்க் கூட்டிணைப்பின் தலைவர் விக்பிரட் ஒயிட் என்பவரால் வரவேற்கப்பட்டார். பன்னாட்டு ஒத்துழைப் பற்றி அங்கு அவர் பேசினர்.

"விக்டாப்" துணைத்தலைவர் அவர்கள் மேல்போனில் தங்கி இருந்தபோது ஆஸ்திரேலிய ஆசிரியர்க் கூட்டிணைப்பின் செயல் நிறைவேற்று குழுவினரோடு, ஆசியாக் கண்டத்தில் நிகழும் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகளில் ஆஸ்திரேலிய ஆசிரியர்கள் எவ்வாறு சிறந்த முறையில் பங்கு ஏற்க முடியும் என்பது பற்றி உரையாடினர். 'விக்டாப்பால்', அறிஞர் அரங்கம் அல்லது தொழிற்சாலை, அல்லது மாநாடு, ஆஸ்திரேலியாவில் நடத்த முடியுமா என்பதும் ஆராயப்பட்டது. பின்னர் அவர் பொத்திற்கும் மேற்கு ஆஸ்திரேலியாவுக்கும் சென்று சென்னை திரும்பினர்.

அமெரிக்காக் கண்டத்தைச் சேர்ந்தநாடுகள்.. ......

கொலம்பியான ஆசிரியச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏப்ரல் 3-ஆம் நாள் ஒரு தனிக் கூட்டம் நடத்தி, அதன் மூலம், கொலம்பியாக் கல்வி அமைச்சருக்குக் கல்வி வளர்ச்சி சம்பந்தமான 21 விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டன.

பள்ளிகளும் பயிற்சி நிலையங்களும் திறக்கப்படல் வேண்டும் என்றும், தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் பிள்ளைகளுக்கேற்ற புத்தகங்கள் வெளியிட, தேசிய விஞ்ஞானக் கல்விக் கழகம் (National Academy of Sciences) ஒன்று ஏற்படுத்தப் படல் வேண்டும் என்றும், ஓவியம் இசை, கைத்தொழில் போன்ற தனித் திறமைத் துறைகளில் பயிற்சி நிலையங்கள் நிறுவப்படல் வேண்டும் என்றும், கல்வி வளர்ச்சிக்கு அரசினரால் அளிக்கப்படும் உதவி ஆராயப்பட்டு ஒழுங்கு படுத்தப்படல் வேண்டும் என்றும் அவ்விண்ணப்பங்களில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் அவ்விண்ணப்பங்கள், கொலம்பியானு ஆசிரியர்ச் சங்கத்தின் உறுப்பினர்கள் சம்பளம் சரிப்படுத்தப் படல் வேண்டும் என்றும், ஒப்பந்த ஆசிரியர்கள் வேலை நேரம் முழுக்க முழுக்க உயர்த்தப் படல் வேண்டும் என்றும், ஆசிரியர்களுக்கு உணவுப்படி தரப்படல் வேண்டும் என்றும், ஆசிரியர் வீட்டு வாடகைப் படி பாக்கி கொடுக்கப்படல் வேண்டும் என்றும், மேற்படிப்புப் படிக்கின்ற ஆசான்களின் ஊதியம் 25% உயர்த்தப்படல் வேண்டும் என்றும், இன்னும் தரப்படாமல் பாக்கியாக உள்ள சம்பளங்களையும் படிகளையும் அரசு உடனடியாகத் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றன.

பிரேஸிலில் உள்ள ஆரியச் சங்கங்களை வலிமைப் படுத்தவும், ஆசிரியத் தொழில், கல்வி மேம்பாட்டிற்காக உழைக்கவும், பிரேசில் ஆசிரியர்ச் சங்கங்களின் கூட்டிணைப்பின் சார்பிலும், 'விக்டாப்பின்' சார்பிலும், அச்சங்கங்களின் கூட்டிணைப்புத் தலைவரும், தலைமைச் செயலாளரும், தொடக்கநிலை ஆசிரியர்ச் சங்கமும் (பிரேஸிலில்) ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள ஆசிரியர்ச் சங்கங்களைப் பார்வையிடப் பயணம் மேற்கொள்ளும்.

கூட்டிணைப்பின் தலைவியாக விளங்கும் செல்வி லூசி மான்டிரோவும், தலைமைச் செயலாளர் பேராசிரியர் யூவால்டோ டி ஆலிவெரா மேலோவும் தங்கள் பயணத்தை முடித்துக்கொண்டு விக்டாப்பிற்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிப்பர்.

செல்வி மான்டிரோ அவர்கள் சமர்ப்பித்த பயணக் குறிப்பின்படி கல்வி வல்லுநர் இருவரும் ஆசிரியர்ச் சங்கங்களை ஆளும் குழுக்களையும், ஆசிரியர் அமைப்புக்களில் ஆர்வங் காட்டும் மக்களையும் சந்திப்பர். இவ்விருவரும் ஆங்காங்குச் சென்று பேசும்போது, கேள்விகள் கேட்பதற்கு ஆசிரியர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும். மேற்குறித்த கூட்டிணைப்பு, விக்டாப் ஆகியவை எவ்வாறு இயங்கி வருகின்றன என்பது பற்றிய தகவலும் தரப்படும்.

செல்வி மான்டிரோவும், பேராசிரியர் மேலோவும் கல்வி அதிகாரிகளைச் சந்தித்து, குறிப்பாக ஆசிரியர்த் தொழிலையும், பொதுவாகக் கல்வியையும் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வர்.

அவர்கள் தங்களுடன் மிமியோகிராப் தாள்களை எடுத்துச் செல்வார்கள். அவற்றில் பிரேஸில் நாட்டின் கல்வி முன்னேற்றத்தைத் தடுக்கின்ற பிரச்சினைகள் சம்பந்தமான தகவல்கள் திரட்டப்படும்,